உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௫௧.] மன்மத-௵—ஆவணிமீ [பகுதி—௧௦.

Vol. 51. August-September—1955. No. 10.

உள்ளுறை

கல்வெட்டும் சைவசமயமும்: 289

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

சேரநாட்டின் தொன்மை: 301

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

பழந்தமிழ்ப் புலவரும் கடவுள் வாழ்த்தும்: 317

M. பொன்னையா

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி–௫௧.] மன்மத௵—ஆவணி௴ [பகுதி–௧௦.

Vol. 51. August-September—1955. No. 10.

கல்வெட்டும் சைவசமயமும்*

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனர் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

சைவத்தின் பழைமை

சைவசமயம் உலகிற் பழைய சமயங்களுள் ஒன்று. அஃது இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்துக்கும் (ஏறத்தாழ 6000 ஆண்டுகளுக்கு) முற்பட்ட பழைமை உடையது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[1] இச் சமயத்தின் சிறப்பு வழிபாடு இலிங்க வழிபாடாகும். இந்த லிங்க வழிபாடு ஆரியர் வருகைக்கு முற்பட்டதாகும். இதனை முதலில் வெறுத்த ஆரியர் பின்பு கைக்கொண்டனர். மாபாரதம் எழுதப்பட்ட காலத்தில் சிவன் மகாதேவனுக்கப்பட்டான். இதற்குக் காரணம், ஆரியர்க்கு முற்பட்ட இந்திய மக்களுள் மிகப்பலர் இலிங்க வழிபாட்டை மேற்கொண்டிருந்ததே யாகும்.

---

*இது 23-12-54ல் விருதுநகரில் நடைபெற்ற சைவசித்தாந்தமகாசமாஜ ஆண்டு விழாவில் பேசப்பட்டது.

1 சர். ஜான் மார்ஷல் முகவுரை, சிந்துவெளி நாகரிகம் நூல், 1 பக்கம் 7.

மிகப்பழைய லிங்கங்கள்

கஜனி முகமதுவால் அழிக்கப்பட்ட சோமநாதபுரத்து லிங்கம், அல்டமஷ் என்பவரால் அழிக்கப்பட்ட உச்சயினியில் இருந்த மகா காள லிங்கம், உச்சயினியிலுள்ள அமரேசுவரலிங்கம், ஸ்ரீசைல லிங்கம், நருமதைக் கரையிலுள்ள ஓங்காரநாத லிங்கம், வங்கத்திலுள்ள வைத்தியநாத லிங்கம், நாசிக்கிலுள்ள த்ரயம்பகேசுவர லிங்கம், கௌதமேச லிங்கம், காசி விசுவேசுவர லிங்கம், திருக்கேதார லிங்கம், தக்கினியிலுள்ள பீமசங்கர லிங்கம், இராமேசுவர லிங்கம் என்னும் பன்னிரண்டும் மிக்க பழைமை வாய்ந்தவை என்று நூல்கள் கூறும். திருப்பதியை அடுத்துள்ள குடிமல்லத்தில் உள்ள லிங்கம் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட பழைமையுடையது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

குப்தர் காலத்தில் சைவம் வடஇந்தியாவில் நன்கு வளர்ச்சி பெற்றது. கி. பி. 6-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த வராகமிகிரர் என்ற வான நூல் வல்லார் லிங்கங்களை அமைக்கும் முறைபற்றி மிக நுட்பமாக எழுதியுள்ளார். ஏறத்தாழ அதேகாலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமூலர், லிங்கங்கள் அமைப்பது பற்றித் தமது திருமந்திரத்தில் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

கோவில்கள்

கி. பி. 7-ஆம் நூற்றூண்டில் தோன்றிய அப்பர், சம்பந்தர் பாடல்களை நோக்க, தமிழகத்தில் வைப்புத்தலங்கள் உட்பட ஏறத்தாழ 500 சிவன்கோவில்கள் இருந்தன என்று கூறலாம். அவையனைத்தும் அழியத்தக்க செங்கல், மண், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்றால் ஆனவை. ஆதலால் 7-ஆம் நூற்றூண்டில் தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்ட மகேந்திரவர்மன் முதலிய பல்லவர்கள் கற்கோவில்களை அமைத்தனர். மலைச்சரிவில் நடுப்பகுதியைக் குடைந்து மண்டபம் போன்ற கோவிலை அமைத்தனர். இக் கோவில்கள் குடைவரைக் கோவில்கள் எனப்படும். பின்னர்ப் பல்லவர் சிறிய பாறைகளைக் கோவில்களாகவே குடைந்து அமைத்தனர். இவை ஒற்றைக் கற் கோவில்கள் எனப்படும். இவையே இன்று மாமல்லபுரத்தில் பஞ்ச பாண்டவர் ரதங்கள் என்று தவறுகக் கூறப்படுகின்றன. பின்வந்த

பல்லவர்கள் பாறைகளைக் கற்களாக உடைத்து இக் காலத்திலுள்ள கற்கோவில்களைப்போல அமைக்கத் தொடங்கினர். கயிலாச விமானம், தூங்கு ஆனை விமானம் என்ற இருவகை விமானங்களும் இக் கோவில்களில் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் முதன்முதல் கட்டப் பட்ட கற்கோவில் காஞ்சி கயிலாசநாதர் கோவிலாகும். அது பல்லவர் காலத்துக் கட்டடக் கலைக்கும் சிற்ப வளர்ச்சிக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பல்லவப்பேரரசு அழிந்து, சோழப்பேரரசு ஏற்பட்டதும், சிறந்த சிவபக்தரான சோழமன்னர்கள் பாடல்பெற்ற கோவில்களை எல்லாம் அழியாத கற்கோவில்களாக மாற்றினர்; தாமும் வானளாவிய விமானங்களைக் கொண்ட பெரிய கோவில்களை எடுப்பித்தனர். பல்லவர் காலத்தில் இருந்த கோவில் ஆட்சியை விரிவுபடுத்தினர்; சோழர்க்குப் பின்வந்த விஜயநகர வேந்தர்கள், விமானங்களை உயர்த்தாது வானளாவிய கோபுரங்களைக் கட்டி மகிழ்ந்தனர். மிகப்பெரிய திருச்சுற்றுக் களையும் ஆயிரக்கால் மண்டபங்களையும் அழகுற அமைத்தனர்,

திருப்பதிகங்கள்

சுந்தரர் காலத்திலேயே திருவல்லம் திருக்கோவிலில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகின்றது. சோழர்கள் காலத்தில் திருமுறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன; செப்பேடுகளிலும் எழுதப்பட்டன. பாடல்பெற்ற கோவில்களில் எல்லாம் பதிகங்கள் பாடும் ஓதுவார் நியமிக்கப்பட்டனர். இசையோடு பொருளுணர்ந்து பாடத்தக்க ஓதுவார்கள் நியமனம் பெற்றனர். திருவொற்றியூர்க் கோவிலில் தேவரடியார் பதினறுபேர் திருப்பதிகம் ஓதினர். திருஆமாத்தூரில் குருடர் பதினறுபேர் ஓதுவாராக இருந்தனர். திருத்தவத் துறையில் பிராமணர் தேவாரம் ஓதினர். தஞ்சைப்பெரிய கோவிலில் நாற்பத்தெட்டுப்பேர் திருப்பதிகம் விண்ணப்பம் செய்தனர். இவ்வாறு பெரும்பாலான கோவில்களில் திருப்பதிகங்கள் ஓதப் பட்டு வந்தன. ஓதுவார்களை மேற்பார்வையிடத் தேவாரநாயகர் என்ற

அரசாங்க உயர் அலுவலாளர் ஒருவர் இருந்தார் என்பது தெரிகின்றது. பெரியகோவில்களில் திருக்கைக் கோட்டி என்னும் பெயர் கொண்ட மண்டபங்கள் இருந்தன; அவற்றுள் திருமுறை நூல்கள் வைத்துப் பாதுகாக்கப்பட்டன; அழிந்தவற்றைப் புதுப்பிக்கவும், ஏடுகளைப் பூசிக்கவும், அவற்றை மேற்பார்வையிடவும் ஒருவர் இருந்தார். அவர் 'தமிழ் விரகர்' எனப்பட்டார். அவருக்கு மானியம் விடப்பட்டிருந்தது. சீர்காழி, திருக்காறுயில், திருவீழிமிழலை, திருவுசாத்தானம் போன்ற கோவில்களில் இத்தகைய மண்டபங்கள் இருந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நாயன்மார் திருமேனிகள்

ஒவ்வொரு நாயனாரும் வாழ்ந்து மறைந்த ஊரிலுள்ள சிவன் கோவிலில் அவருக்குச் செம்பிலும் கல்லிலும் உருவங்கள் அமைக்கப்பட்டன; அவ்வுருவங்கள் பூசிக்கப்பட்டன. அவர்கட்கு விழாவும் நடைபெற்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்ற சிறப்புடைய அடியார் உருவங்கள் பலகோவில்களில் எழுந்தருளப் பெற்றன. சுந்தரர் உருவச் சிலையோடு, அவர் மனைவியர் உருவச்சிலைகளும், அவ்வாறே சிறுத்தொண்டர், அவர் மனைவியார் மகனர் உருவச்சிலைகளும் சில கோவில்களில் எழுந்தருளப்பெற்றன. சில செப்புத்திருமேனிகளுக்கு அடியில், "உலகாண்ட மூர்த்தி", "தத்தா! நமரே காண் என்ற மிலாடுடையார்", என்பன போன்ற சிறப்புத்தொடர்கள் குறிக்கப்பட்டன.

நாயன்மார் ஓவியங்கள்

தஞ்சைப் பெரிய கோவிலில் கருவறையின் புறச் சுவரொன்றில் சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட்கொள்ளும் வரலாறும், சுந்தரர் யானை மீதும், சேரமான் குதிரை மீதும் கயிலை செல்லும் காட்சியும் அழகொழுகும் ஓவியங்களாகத் திகழ்கின்றன. சுந்தரரும் சேரமானும் தலைமுடியும் தாடியும் வைத்திருத்தல் பண்டைக்கால மயிரொப்பனையையும், அவர்கள் பலவகை அணிகளை அணிந்திருத்தல் அக்கால அணிவகைகளையும் நமக்கு நன்கு விளக்குவனவாகும்.

நாயன்மார் சிற்பங்கள்

ஒவ்வொரு நாயனார் வரலாற்றிலும் உயிர்நாடியாகவுள்ள நிகழ்ச்சியைச் சிற்பமாகக் குறிக்கும் வழக்கம் சோழர்காலத்தில் உண்டாயிற்று. மேலக்கடம்பூர்ச் சிவன்கோவிற் கருவறையின் புறச்சுவர்களில் இத்தகைய சிற்பங்களைக் காணலாம். இரண்டாம் இராசராசன் கட்டிய இராசராசேச்சுரத்தில் அடியார் எல்லாருடைய நிகழ்ச்சிகளையும் ஒருங்கே காணலாம். கண்ணப்பர் வரலாறுபற்றிய சிற்பங்கள் தஞ்சைப் பெரிய கோவில் நடுமண்டபச் சுவரில் பலகாட்சிகளாகக் காட்டப்பட்டுள்ளன. சண்டேச நாயனார் சிவபெருமானால் கொன்றைமாலை அணிவிக்கப்பட்டுச் சண்டேசபதம் கொடுக்கும் காட்சியே அந் நாயனார் வரலாற்றில் சிறப்புப் பகுதியாகும். இக் காட்சியை இராசேந்திரசோழன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சரத்தில் இன்றும் கண்டுகளிக்கலாம். நாயன்மார் திருமேனிகளும், அவர்தம் வரலாற்றுச் சிற்பங்களும் பொதுமக்கள் பார்வையில் பட்டு, அவர்களைச் சிவநெறிச் செல்வர்களாக்கவேண்டும் என்பதே சோழமன்னர்களின் விருப்பமாகும்.

நாயன்மார் விழாக்கள்

செங்காட்டன்குடியில் சிறுத்தொண்டநம்பி விழாவும், சீகாழியில் ஞானசம்பந்தர் விழாவும், திருவாரூரில் சுந்தரர் விழாவும், திருவதிகையில் திருநாவுக்கரசர் விழாவும் சிறப்பாக நடைபெற்றன. இவ்வாறே பலகோவில்களில் அவ்வத்தலத்து நாயனார் விழாக்கள் நன்கு நடைபெற்றன. அவை நன்கு நடைபெறக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன என்று பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பெருங்கோவில் விழாக்காலங்களில் திருத்தொண்டத்தொகை முதலிய பதிகங்களும், மார்கழித் திங்களில் திருவெம்பாவையும் ஓதப்பட்டு வந்தன.

நாயன்மார் பெயர்கள்

சோழர்காலச் சைவமக்கள் நாயன்மார்மீது அளவுகடந்த பற்றுக் கொண்டிருந்தனர் என்பதை அறிவிக்க அவர்தம் பெயர்களைத் தம்

பிள்ளைகட்கு வழங்கியதிலிருந்து அறியலாம். சிறுத்தொண்ட நம்பி, வெண்காட்டு நங்கை, பரவை நங்கையார், திருவெண்காட்டு நங்கை, கண்ணப்ப தேவர், ஐயாற்றடிகள், புகழ்த்துணையடிகள், காரிவேளார், கோட்புலி, சிங்கன் கலியன் காமன், தர்பன், ஆரூரான் கம்பன், நம்பி விடங்கன், அணுக்க வன்றொண்டன், உடைய நம்பி, கலையன்குமரன், ஆலாலசுந்தரப் பல்லவரையன், தண்டியடிகள், கம்பன் மதுராந்தகன், திருநீலகண்டன், இளையான்குடி கிழவன், கலியன் மன்றாடி, பரசமய கோளரி, மானி, கலியன்மாணிக்கம் போன்ற எண்ணிறந்த பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

அக்காலச் சைவமக்கள் நாயன்மார் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்கு வழங்கியதோடுமட்டும் நில்லாது, இடங்களுக்கும் அப் பெருமக்களின் பெயர்களை இட்டு வழங்கினர் என்பது கல்வெட்டுக்கள் உணர்த்தும் செய்தியாகும். கண்ணப்ப தேவர் கமுகந்தோப்பு, திருஞானசம்பந்த நல்லூர், திருஞானசம்பந்த மங்கலம் என்னும் இடப்பெயர்கள் இங்குக் குறிக்கத்தக்கவை. பரஞ்சோதி மடம், திருவாகீசன் மடம், தில்லைவாழ் அந்தணர் மடம், நம்பி திருமுருகன் திருமடம், நமிநந்தியடிகள் மடம். பரசமய கோளரி மடம், திருத்தொண்டத் தொகையான் திருமடம், திருமூலதேவர் மடம், சிறுத்தொண்டர் திருமடம் என்பன குறிக்கத்தக்கவை.

திருமுறைகளும் மக்களும்

அக்கால மக்கள் திருமுறைகளிடம் கொண்டிருந்த அளப்பரிய பற்றைப் பின்வரும் மக்கட்பெயர்களும், ஊர்ப்பெயர்களும் நன்குணர்த்தும். தேவாரம் அழகியான், ஆண்டார் திருத்தொகையான், திருமுறைத் தேவாரச் செல்வன், திருத்தொண்டத்தொகை நல்லூர், திருத்தொண்டத்தொகை மங்கலம் என்பன போன்ற பெயர்களைக் காண்க.

திருமுறைகளை நன்குபடித்த பழக்கத்தால் அக்காலச் சைவ நன்மக்கள், நாயன்மார் பயன்படுத்திய சொற்றொடர்களை மக்களுக்கும் ஊர்

களுக்கும் பிறவற்றிற்கும் பெயர்களாக வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தனர் என்பதும் பல கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அவற்றுட் சில கீழே காண்க.

(1) "சிவாயநம வென்று நீறணிந்தேன்" என்பது அப்பர் தேவாரம். 'நீறணிந்தான் சேதிராயன்' என்பது ஒரு சிற்றரசன் பெயர். (2) 'நச்சுவார்க்கினியர் போலும் நாகஈச்சுரவனாரே' என்பது அப்பர் வழக்கு. 'நச்சினார்க்கினியன் தில்லையம்பல மூவேந்த வேளான்' என்பது ஓர் அரசியல் அலுவலான் பெயர். (3) மழபாடி வயிரத் தூணே என்றென்றே நான் அரற்றி' என்பது அப்பர் வாசகம். 'ஆனைமங்கல முடையான் பஞ்சநதி வயிரத்தூண்' என்பது ஒருவன் பெயர். (4) 'அரசாள்வர் ஆணைநமதே' என்பது சம்பந்தர் வாக்கு, 'ஆணைநமதென்ற பெருமாள்' என்பது ஒருவன் பெயர். (5) 'பொன்னார் மேனியனே' என்பது சுந்தரர் சொற்றொடர். பொன்னார் மேனி விளாகம்' என்பது ஓரிடத்தின் பெயர். (6) கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் (கி. பி. 1 -ஆம் நூற்றாண்டின்முற் பாதியில்) திருவெண்ணெய் நல்லூர்க் கோவிலில், "பிச்சன் என்று பாடச்சொன்னான் என்ற பெயர்கொண்ட ஊது கொம்புகள் இரண்டு, இருந்தன.

சமயநூல் விளக்கம்

பல கோவில்களில் சைவசமய நூல்கள் படித்துப் பொதுமக்களுக்கு விளக்கப்பட்டன. பாரதம், இராமாயணம், சிவதர்மம், திருஞானம், சோமசித்தாந்தம் என்பன பலகோவில்களில் பேசப்பட்டுவந்தன. ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் (பெரிய புராணம்) திருவொற்றியூரில் படிக்கப்பட்டது. அதனைச் சோழன் இரண்டாம் இராசாதிராசன் இருந்து கேட்டு மகிழ்ந்தான் என்று திருவொற்றியூர்க் கல்வெட்டுக் குறிக்கின்றது. திருநீடூரில் 'புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகை' ஒன்று முதற்குலோத்துங்கன் காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது.

ஆடலும் பாடலும்

கோவில்களில் சமயத்தொடர்பான ஆடல்களையும் பாடல்களையும் நிகழ்த்த ஆடல் பாடல்களில் வல்ல மகளிர் அமர்த்தப்பட்டிருந்தனர் என்பதை எண்ணிறந்த கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இராசராச சோழன் தஞ்சையில் கட்டிய பெரியகோவிலில் மட்டும் 400 தலைக்கோலிகளை அமர்த்தியிருந்தான். அவர்கள் தமிழகத்துப் பல்வேறு கோவில்களிலிருந்து வருவிக்கப்பட்டார்கள். ஒவ்வொருத்திக்கும் ஒரு வேலி நிலமும் ஒரு வீடும் வழங்கப்பட்டன. இவ்வாறு பல கோவில்களில் ஆடல் மகளிரும் பாடல் மகளிரும் இருந்து சமயப் பணியாற்றினர். இவருள் 'பதியிலார்' ஒருவகையினர்; 'ரிஷபத்தளியிலார்' (சிவன்கோவிற் பெண்டுகள்) மற்றொரு வகையினர்; திருவொற்றியூர்க் கோவிலில் சொக்கம், சாந்திக் குனிப்பு என்னும் நடனவகைகளைப் பதியிலார் ஆடும்போது, ரிஷபத்தளியிலார் பிடற்றுப் பாடலை வழங்கினர். ரிஷபத்தளியிலார் அகமார்க்கம், வரிக்கோலம் என்னும் நடனவகைகளை நடித்துக்காட்டினர். பதியிலார் திருப்பதிகக் கருத்துகட்கும், திருவெம்பாவைக் கருத்துகட்கும் ஏற்றவாறு நடித்தனர் என்பது திருவொற்றியூர்க் கல்வெட்டால் தெரிகின்றது. இங்ஙனம் திருப்பதிகத்திற்கு ஏற்ற நடனவகைகள் இன்று இல்லாதிருத்தல் வருந்தற்குரியது.

தேவரடியார்

கோவில்களிலிருந்து தொண்டாற்றிய மாதர்களுள் தேவரடியார் ஒருவகையினர். இவர்கள் கோவிலில் திருவலகிடல், திருமெழுகிடல், திருவமுதுக்குரிய அரிசியைத் தூய்மைசெய்தல், திருப்பதிகம் பாடல் முதலிய பணிகளைச் செய்துவந்தனர்; திருநீற்றுக் காப்புத் தட்டும் மலர்த்தட்டும் விழாக்களில் ஏந்திவந்தனர். விழாக்காலங்களில் அம்மனுக்குக் கவரி வீசினர்; அச்செயலால் அவர்கள் 'கவரிப்பிணா' என்றும் அழைக்கப்பட்டனர். இங்ஙனம் தேவரடியார் நிலையை அடைந்த பெண்கள் ஒரு குறிப்பிட்ட சாதியாரல்லர்; எல்லா இனத்து மகளிரும் இச் சைவப்பணியை மேற்கொண்டு சூலமுத்திரை பொறிக்கப்பெற்றுத்

தேவரடியார் என்னும் தகுதியைப்பெற்றுவந்தனர். அழகிய பாண்டிய பல்லவரையன் என்ற படைத்தலைவனொருவன் தன் குடும்பப் பெண்களைத் தேவரடியார் ஆக்கினான் என்று திருவல்லம் கோவிற் கல்வெட்டுத் தெரிவித்தலை நோக்க இவ் வுண்மை இனிது புலனாகிறது.

மடங்கள்

பௌத்த மதத்திற்கும், சமண மதத்திற்கும் அவ்வச் சமயக்கோவில்களை அடுத்து மடங்கள் இருந்ததுபோலவே, சைவசமயவளர்ச்சிக்குக் கோவில்களை அடுத்தும், தனித்தும் தமிழகத்தில் பலமடங்கள் இருந்தன. அப்பர், சம்பந்தர் காலமுதலே மடங்கள் சிவப்பணியைச்செய்து வந்தனவாயினும், சோழர் காலத்தில் மிகப் பலமடங்கள் தோன்றிச் சமயத் தொண்டினை நன்கு ஆற்றலாயின. திருவாவடுதுறையில் மட்டும் திருநீலவிடங்கன் மடம், சிவலோக நாயகன் மடம், சர்வதேவன் மடம், பஞ்சநதிவாணன் மடம், திருவிதி மடம், பிராமணவாசகன் மடம், நாற்பத்தெண்ணாயிரவன் மடம், முந்நூற்றிருபத்து நால்வன் மடம், பெருந்திருவாட்டி அறச்சாலை, சங்கரதேவன் அறச்சாலை என்பன இருந்தன. இவ்வாறு பல பெருங்கோவில்களை அடுத்திருந்த மடங்களுக்குப் பக்கத்தில் மருத்துவ மனைகளும் அமைப்புண்டிருந்தன.

இவற்றுள் காளாமுகச் சைவர்களின் மடங்கள் சில; காபாலச் சைவமடங்கள்சில; வீரசைவமடங்கள் மிகச்சில; வடநாட்டுக் கோளகி மடத்தைச் சேர்ந்த கிளைமடங்கள் சில. வாரணாசிக் கொல்லாமடத்துக் கிளைகள் சில தமிழகத்து இருந்தன; வாரணாசிப் பிக்ஷாமடத்துக் கிளை மடங்கள் சிலவும் இருந்தன. இவை அனைத்திலும் மேற்சொன்ன பலவகைச் சமயநூல்கள் பொது மக்களுக்குப் படித்து விளக்கப்பட்டன.

தமிழ்ச் சைவமடங்கள்

மாளிகை மடத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த மடங்கள் சில; சண்பைக்குடி முதலியார் சந்தான மடங்கள் சில; மருதப் பெருமாள் சந்தான மடங்கள் சில. இச் சைவமடத்துத் தலைவர்கள் சைவ

சித்தாந்த சாத்திரங்களிலும், சைவத் திருமுறைகளிலும் சிறந்து விளங்கினர்; மக்களை நல்வழிப் படுத்தினர். இச் சைவ மடாதிபதிகளின் செல்வாக்குத் தமிழகத்தில் மிகுந்து பரவியது.

தமிழகத்துச் சைவம் சாதிபேதமற்றது; 'அன்பே சிவம்' என்ற கொள்கையால் அனைவரையும் ஒரு தாய் ஈன்ற மக்களாகக் கருதும் விரிந்த மனப்பான்மையுடையது. ஆதலால், பெரும்பாலரான தமிழ் மக்கள் இச் சைவ மடத்துத் தலைவர்களின் அருளுரைகளில் பெரிதும் ஈடுபட்டனர். இச்சைவ மடங்களைப்பற்றி ஆராய்ச்சியாளர் பாராட்டிக் கூறியுள்ளனர்.*

---

* "............. Saivism thus appears to have gradually grown stronger and stronger under the patronage of the Cola kings so that in the beginning of the 13th century we notice a number of Mathas presided over by Saiva sanyasins, spreading their influence over a pretty large portion of the Tamil country. All this must have been in spite of the teachings of the great Advita philosopher Sankaracharya whose doctrines are well-known. The philosophical expositions of the Advaita teacher do not exclude the methods of pious devotion to be practised in the first stages of spiritual development, but insist on strict adherence and the paths of karma as laid down in the Sastras. The Saiva creed, on the other hand, does not appear to have paid much attention to Sastric Karma but taking unsullied devotion to Siva as its basis, it received into its fold all classes of people without any distinction of caste. This Catholicity of the Saiva faith rendered it not very popular with the orthodox Brahmanas, but the non-brahman classes eagerly took to it and at the beginning of the 13th century, as stated already, it was apparently very influential with its centres in many places..... ......: The Mathas of the Saiva sanyasins called Sivayogins (177 of 1908) or Maheswaras (164 of 1908) were mostly named after the famous Brahmin Saiva saint Tiruganasambandar and the Non-Brahman saint Tirunavukkarasar" (A. R. E. 1909. P. 103).

சோழர்க்குப் பிற்பட்ட நாயக்கர் காலத்தில் புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் மெய்கண்ட சந்ததி மடம் ஒன்றிருந்தது. இம்மெய்கண்ட சந்ததியில் வந்த நமசிவாய தேசிகரால் ஏற்படுத்தப் பட்டதே திருவாலவடுதுறை ஆதீனம். அதே சந்ததியைச்சேர்ந்த ஞானசம்பந்ததேசிகரால் உண்டானது தருமபுர ஆதீனம்.

சைவமடங்கள் ஏறத்தாழக் கி. பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து கோவில் ஆட்சியையும், சமயவளர்ச்சியையும் நன்கு கவனித்துவந்தன. இவை சமய யாத்திரீகர்களுக்குப் புகலிடமாய் விளங்கின; சமயக்கல்வி யையும் சமய வொழுக்கத்தையும் பொது மக்களிடையே வளர்த்தன. பிணியாளர்களும் இம்மடங்களில் மருந்து முதலியன பெற்றனர்.

குகைகள்

இப்பெயர்கொண்ட ஒருவகை மடங்கள் பிற்காலச் சோழர் காலத்தில் வளர்ச்சிபெற்றன. சீகாழி, சிதம்பரம், திருப்புகலூர் முதலிய பலவூர்க் கோவில்களில் இவை இருந்தன. இவை பாதுகாப்பு மிக்கவை; திருமுறைகளில் வல்ல சைவத்துறவிகளைத் தலைவர்களாகப் பெற்றவை. இத்தலைவர் தம் சீடர்கள் பல கோவில்களிலிருந்து திருமுறைகளை ஓதினார்கள்; சில கோவில்களில் தவசிகள், ஆண்டார்கள், யாத்திரீகர் முதலியோர் உண்பிக்கப்பட்டனர். இத்தகைய குகைகளாலும், முன் சொல்லப்பட்ட மடங்களாலும் சைவசமயம் நன்கு பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது என்பது கல்வெட்டுக்கள்கொண்டு அறியப் படும் உண்மையாகும்.

மக்கள் தொண்டே சமயத் தொண்டு

பெருங்கோவில்களில் பொதுமக்கள் நலனுக்காக நூல்நிலையம் இருந்துவந்தது. அதனைச் 'சரஸ்வதி பண்டாரம்' என அக்காலத்தார் வழங்கினர். சில பெரிய கோவில்களை அடுத்து மருத்துவ மனைகள் இருந்தன. அவற்றுள் மருத்துவரும் (Physicians), சல்லியக்கிரியை பண்ணுபவரும் (Surgeons), தாதிமாரும் (Nurses), மருந்துப்

பொருள்களைக் கொண்டு வருவாரும், மருந்துகளைச் செய்வாரும் இருந்தனர். நோயாளிகளுக்குப் படுக்கைகள் இருந்தன. ஊரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டுக் குடிமக்கள் தவிக்கும்போது, அவ்வூர்க் கோவிலிலுள்ள வெள்ளி, பொன்நகைகளையும், பாத்திரங்களையும் உருக்கி, ஊரார்க்குக் கடனாக உதவுவதும், பஞ்சம் நீங்கிய பிறகு, உதவிய கடனை மீட்டுப் பெறுவதும் வழக்கமாக இருந்தது என்பது ஆலங்குடிக் கல்வெட்டால் தெரிகிறது.

இங்ஙனம் கோவில்கள் பொருளாதாரத் துறையிலும், உடல்நலத் துறையிலும், அறிவுத்துறையிலும், சமயத்துறையிலும் பொதுமக்களுக்குத் தொண்டுசெய்து வந்தமையாற்றான், தமிழகத்தில் சைவசமயம் மக்களுக்குப் பயன்படத்தக்க சமயமாகவிளங்கியது. இப்பண்டை நிலை மீண்டும் புதுப்பிக்கப்படுமாயின், சைவசமயம் மக்கள் சமயமாக மலர்ச்சி பெறும். திருக்கோவில் வழிபாடும் தாய்மொழியில் நடைபெறுதல் வேண்டும். திருவொற்றியூர்க் கல்வெட்டில்கண்டபடி திருப்பதிகங்கள், திருவாசகம் இவற்றின் கருத்துக்களைப் புலப்படுத்தும் நடனவகைகளும் வளர்ச்சிபெறுதல் வேண்டும். தமிழ் நடன ஆசிரியர்களும், தமிழ்நடனப் பெண்மணிகளும் இத் துறையில் விரைந்து கவனஞ் செலுத்துதல் வேண்டும். இந் நிலை ஒவ்வொரு கோவிலிலும் ஏற்படுமாயின், நம் திருமுறைகளின் உண்மைச் சிறப்பினை மக்கள் உணர்ந்து பயன்பெறல் கூடும். இம் முறையைப் பின்பற்றாமல் தமிழ் மக்களுக்கே புரியாத மொழியில் தமிழகத்துக் கோவில்களில் வழிபாடு நடைபெறுவதால், மனவொருமைப்பாட்டுக்குரிய திருக்கோவில்கள் அப் பணியைச் செய்யத் தவறியவை ஆகின்றன. ஆதலால், நாட்டிலுள்ள சைவநன்மக்களும், மக்கள் நலனுக்காக விளங்கும் அரசாங்கமும் இத்துறையில் கவனஞ் செலுத்தி, தமிழகத்துத் திருக்கோவில்களில் தமிழ் வழிபாட்டினை நடைமுறையில் கொணர்தல் வேண்டும். இங்ஙனம் தமிழில் வழிபாடு நடைபெறும் நன்னாளே நம் சைவம் தழைத்தோங்கும் பொன்னாளாகும்.

சேரநாட்டின் தொன்மை

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

சேரநாட்டின் தொன்மை நிலையை யுணர்வதற்குப் பண்டை நாளைச் சங்கத் தொகை நூல்கள் ஓரளவு துணைசெய்கின்றன. இந்நூல்கள் பலவும் சான்றோர்பலர் அவ்வப்போது பாடிய பாட்டுக்களின் தொகையாதலால், அவற்றுள் சேரவேந்தர்களையும் சேரநாட்டுக் குறுநிலத்தலைவர்களையும் முறைப்படுத்திக் காண்பதற்குப் போதிய வாய்ப்பு இல்லை. அவற்றைப் பாடிய சான்றோரும் சேரநாட்டின் இயற்கை நிலையினை நம் மக்கள் வர்ழ்க்கை முறையினையும் வரலாற்று முறையில் வைத்துக் கூறினாரில்லை. ஆயினும் இந் நூல்களால் சேரநாட்டு மலைகளிற் சிலவும் யாறுகளிற் சிலவும் ஊர்களிற் சிலவும் தெரிகின்றன. இந் நூல்களிலும் பதிற்றுப்பத்தும் புறநானூறும் சேர வேந்தர்களையும் சேரநாட்டையும் சில பல பாட்டுக்களில் சிறந்தெடுத்துக் கூறுகின்றன. ஏனையவை, ஆங்காங்குச் சிற்சிலகுறிப்புக்களையே வழங்குகின்றன.

இச் சங்கத் தொகை நூல்களை அடுத்துப், பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரமும் மணிமேகலையுப சேரநாட்டைப்பற்றிச் சிறிது விரியக் கூறுகின்றன. இவ் விரண்டின் ஆசிரியர்களும் சேரநாட்டவராதலால் அவர் கூறுவன நமது ஆராய்ச்சிக்குத் துணையாகின்றன. ஆயினும் அவை கிறித்துவுக்குப் பிற்பட்ட சாலத்தன. கிறித்து பிறப்பதற்கு முன்னைய காலத்தேயே நம் தென் தமிழ்நாடு சிறந்து விளங்கியதாகலின், அக் கர்லத்து நிலையை விளக்குதற்கு இந்த இரு நூல்களும் நிரம்புவனவாகா. ஆகவே, கிறித்துவுக்கு முற்பட்ட காலத்து வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைப்பின் அவற்றைஆராயவேண்டியது கடனாகிறது.

கிறித்துவுக்குமுன் தோன்றிய நூல்கள் தொல்காப்பியமும் சங்கத் தொகை நூல்களிற் காணப்படும் பாட்டுக்களுட் சிலவுமேயாம்,

தொல்காப்பிய நூலின் நோக்கம் வரலாறு கூறுவதன்று; ஆயினும் அதன் பொருளிலக்கணப் பகுதி தமிழ் கூறும் நல்லுவகத்து மக்களுடைய வாழ்க்கைக் கூறுகளைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுவது. அந் நிலையில் அது சேரமன்னருடைய அடையாளப்பூ, அவர்க்குச் செந்தமிழ் நாட்டின்பாலுள்ள உரிமை முதலியவற்றைக் குறிப்பதோடு நின்றுவிடுகிறது,

இந்த நூற்றொகுதிகளைக் காண்போமாயின், சங்க காலத்தில்; ஏனைச் சோழ பாண்டிய நாடுகளைவிடச் சேரநாடு வடவாரியர் கூட்டுறவை மிகுதியாகப் பெற்றிருப்பது தெரிகிறது. அதனால், சேரர்களைப்பற்றிய குறிப்புக்கள் வடநூல்களில்காணப்படுதற்கு இடமுண்டு. வடநூல்களில் இருக்குவேதமூம் தைத்திரீயமும் வியாசபாரதமும் சேரர்களைச் சேரர் என்றே குறிக்கின்றன.[1] மேலும் இருக்குவேதத்தின் கண் "ப்ரஜா: திஸ்ரோ அத்யாயம் அயூஹ்[2]" என்பதற்குப் பொருளுரைக்கும் தைத்திரீய ஆரண்யகம், "யாவைத்தா இமாஹி ப்ரஜா: திஸ்ரோ அத்யாயம் ஆயம்தானி இமானி வயாம்ஸி வங்கவாகதா: சேரபாதா:[3]" என்று உரைத்தது. இதற்கு உரைகூறிய சாயனாசாரியர் வயாம்ஸி யென்றது ப்றவைகளென்றும், வங்க வாகதா: என்றது மாஞ்செடிகளென்றும், சேரபாதா: என்றது பாம்புகளென்றும் உரைத்தார். ஆனந்ததீர்த்தரென்பார் இம் மூன்றும் முறையே பிசாசர், இராக்கதர், அசுரர் என்ற மூவரையும் குறிக்குமென்றார். கீத் (Keith) என்னும் மேனாட்டறிஞர் வங்கவாகதர் சேரபாதர் என்பன வங்கர்களையும் மாகதர்களையும் சேரர்களையும் குறிக்கு மென்றார். இவற்றை ஆராய்ந்து கண்ட ஆராய்ச்சியாளர் கீத்தென்பார் கூறுவதே இடத்துக்கும் இயைபுக்கும் பொருத்தமாக வுளது என்று எடுத்துரைக்கின்றனர்.[1] இராமாயணத்தில்[2] சீதையைத் தேடிச் சென்ற வானர வீரர்களுக்கு வாழ்த்துரைத்த சுக்கிரீவன் தென்னாட்டிடல்பு கூறுங்கால் சோழ சேர பாண்டிய நாடுகளைக் குறித்துச் சொல்லுகின்றான். மகாபாரதத்தில் யுதிஷ்டிரன் இராயசூய யாகம் செய்தபோது

---

[1] P. T. S. Iyengar's History of the Tamils P, 29. 328.
[2] R. V. vii. vol. 14. [3] Tit. Arany. ii. i. i.
[1] P. T. S. Iyengar's History of the Tamils. P. 29, 328.
[2] R. C. Dutt's Ramayanam.

சோழ சேரபாண்டியர் மூவரும் வந்திருந்ததாக வியாசர்[3] கூறுகின்றார். இவ்வாற்றால் வேத காலத்திலும் இதிகாச காலத்திலும் வடநாட்டு, வடவருக்குத் தென்னாட்டுச் சேர சோழ பாண்டியர் தெரிந்திருந்தனர் என்பது தெளிவாய் விளங்குகிறது.

இப்போது சேரநாட்டின்கண் அதன் தொன்மை கூறும் வகையில் வரலாற்று நூல்கள் இரண்டு நிலவுகின்றன. அவை கேரளமான்மியம் கேரளோற்பத்தி என்பனவாம். அவற்றுள் மான்மியம் வடமொழியிலும் கேரளோற்பத்தி மலையாள மொழியிலும் உள்ளன. அவை காலத்தால் மிகவும் பிற்பட்டவையாயினும், இன்று அவை நாட்டுவரலாறாகக் கூறப்படுவது பற்றி ஈண்டு, ஆராயும் தகுதி பெறுகின்றன. இவற்றுள் கேரளோற்பத்தியை எழுதியவர் துஞ்சத்து இராமாநுஜன் எனப்படுகின்றார்.

வேந்தர் குலத்தை வேரறுத்துவந்த பரசுராமன் புதிதாக நாடு ஒன்று படைக்க விரும்பித் தன் தவவன்மையாற் கடலிலிருந்து மலையாள நாட்டை வெளிப்படுத்தி அதன்கண் பிராமணர்களை வாழச் செய்தான். அவர்கட்குச் சில காலத்துக்குப்பின் நாகர்களால் பெருந் துன்பமுண்டாயிற்று. அதனால் அவர்கள் அனைவரும் அந் நாட்டினின்றும் போய்விட்டனர். பின்னர்ப் பரசுராமன் வடக்கில் உள்ள ஆரியநாட்டில் அறுபத்துநான்கு ஊர்களில் வாழ்ந்த பிராமணர்களைக் கொணர்ந்து குடியேற்றினன்; நாகர்களாலுண்டான இடுக்கண் நீங்க நாகவழிபாடும் நாகர்கட்குக் கோயில்களும் ஏற்படுத்தினன். அச் செயல்களால் நாகர் துன்பம் குறைந்தது. அதனையறிந்த பழைய பிராமணர்கள் தங்களைப் பழந் துளுவரென்றும் துளு பிராமணர்கள் என்றும் கூறிக்கொண்டு திரும்பி வந்தனர். பரசுராமன் அவர்கட்கு நாகர் இடுக்கண் பற்றறத்தொலையும்பொருட்டு மந்திரங்கள் கற்பித்துக் கோயில்களிற் பணிபுரியுமாறு ஏற்பாடு செய்தான். மருமக்கள் தாய முறையினை முதற்கண் ஏற்படுத்தியவனும் பரசுராமனே.

சில காலத்துக்குப்பின் அப்பிராமணர்கட்கிடையே மனப்புழுக்கமும் பூசலுமுண்டாக நான்கு பேரூர்களில் வாழ்ந்த பிராமணர்களை

---

3 வியா. பாரதம். ii: 84:1 271; iii. 51: 1988; V. 22656.

வருவித்து ஊர்க்கொருவராக நால்வரைத் தேர்ந்து அவர்களை அரசியலை நடத்துமாறு பாசுராமன் ஏற்படுத்திச் சென்றான். நால்வருள் ஒருவன் தலைவனாதல்வேண்டுமெனவும்; அவனும் மூன்று ஆண்டுக்கு மேல் தலைமை தாங்குதல் கூடாதென்றும் அவர்கள் தங்களுக்குள் வகைமை செய்துகொண்டனர். அரசியலுக்கு ஆறிலொன்று கடமையா வரைடறுக்கப்பட்டது.

காலம் செல்லச் செல்ல வேலியே பயிரை மேயத் தலைப்பட்டது என்றாற்போல இத் தலைவர்கள் மக்கட்கு இன்னல் விளைக்கலுற்றனர். இக் கொடுமை நீங்கவேண்டி அந்தப் பிராமணர்கள் தங்கட்கு அரசியல் தலைவனாகிறவன் தங்கள் நாட்டவனாக இருத்தல் கூடாதென்று துணிந்தனர். கேயபுரம் என்னும் இடத்திலிருந்தொருவனைத்தேர்ந்து கேயபெருமாள் என்று சிறப்புப்பெயர் நல்கித் தங்கட்குப் பன்னிரண்டாண்டு வேந்தனாக இருக்குமாறு ஏற்பாடு செய்தனர். அவனுக்கு முடிசூட்டும்பொழுது சேரமான் பெருமாள் என்று பெயர்கூறப்படும். கேயபெருமாட்குப்பின் சோழன் பெருமாளும் அவற்குப்பின் பாண்டி நாட்டுக் குலசேகரனை பாண்டிப்பெருமாளும் ஆட்சிசெய்தனர்.

கேயபெருமாள் கொடுங்கோளூரிலிருந்து பன்னிரண்டாண்டுகள் ஆட்சி செய்தான்; தலையூரில் கோட்டை யொன்றையும் அவன் கட்டினான். பின்வந்த சோழப் பெருமாள் பத்தாண்டும் இரு திங்களும் இருந்துவிட்டுப் பழையபடியே சோழநாடு சென்று சேர்ந்தான். அவன் சோழக்கரையில் கோட்டை யொன்றைக் கட்டினான். பாண்டிப்பெருமாள் பாம்பா என்னுமிடத்தே முடி சூட்டிக்கொண்டு ஒன்பதாண்டு அரசுபுரிந்துவிட்டுப் பாண்டிநாடு சென்றான். அவற்குப் பின் சோழப் பெருமாள் ஒருவன் வந்து பன்னிரண்டாண்டும், பாண்டிப்பெருமாள் ஒருவன் பன்னிரண்டாண்டும் ஆட்சி செய்துவிட்டு நீங்கினர். இதற்கிடையே கலியுகம் பிறந்து பல ஆண்டுகள் கழிந்தன. கலியின் கொடுமை எழுவது கண்ட கேரள நாட்டு வேதியர்கள் "பூருவதேசத்துப்" பாணிப்பெருமாள் என்ற ஒருவனைக் கொணர்ந்து கேரள நாட்டுக்கு வேந்தனாக்கினர். அவ்

வேந்தன் புத்தசமயத்தை மேற்கொண்டான். புத்தர்கட்கும் வைதிக வேதியர்கட்கும் சமயச் சொற்போர் நடந்தது. முதலில் புத்தர்கள் தோற்றனர். வேந்தன் வைதிக சமயத்தை மேற்கொண்டு புத்தர்களை நாட்டினின்று விரட்டினன். எனினும், நான்காண்டுகட்குப் பின் அவன் மெக்காவுக்குச் சென்றொழிந்தான்.

பின்பு துளுவன் பெருமாள் என்றொருவன் வடநாட்டினின்றும் போந்து கேரளநாட்டு அரசை மேற்கொண்டான்; தனது ஆட்சிக்குட்பட்ட நாட்டுக்கும் துளுவநாடு என்று பெயரிட்டான். அத்துளுவன் ஆறாண்டுகள் ஆட்சி செய்துவிட்டு இறந்தான். அவனை அடுத்த இந்திர பெருமாள் என்பவன் வேந்தனாகிக் கொடுங்கோளூரிலிருந்து பன்னீராண்டுகள் ஆட்சிபுரிந்துவிட்டுப் பூருவதேசம்போய்ச் சேர்ந்தான். அவற்குப்பின் ஆரியபுரத்து ஆரியபெருமாள் என்பவன் வேந்தனானான். அவன்தான் கேரளநாட்டைத் துளுராச்சியம், கூபக ராச்சியம், கேரள ராச்சியம், மூசிக ராச்சியம் என நான்காக வகுத்த முதலரசன். அவனுக்குப்பின் கந்தன் பெருமாள் என்பவன் பூருவ தேசத்திலிருந்துவந்து நான்காண்டுகள் ஆட்சிசெய்தான். கைநெற்றி எனுமிடத்தே அவன் ஒருகோட்டையைக்கட்டினான். கோட்டிப்பெருமாள் ஓராண்டும், மாடப் பெருமாள் பதினோராண்டும் அவன் தம்பி ஏழிப்பெருமாள் பன்னீராண்டும் ஆட்சிசெய்தனர். பின்பு கொம்பன் பெருமாள் தோன்றித் தானிருந்த மூன்றரை யாண்டும் நெய்த்தாரா ஆற்றங்கரையில் ஒரு குடிலில் இருந்தொழிந்தான். விசயன் பெருமாள் விசயன் கொல்லம் என்ற கோட்டையை அமைத்துப் பன்னீராண்டு ஆட்சிசெய்தான். பின்வந்த வல்லப பெருமாள் சிவலிங்கம் ஒன்று கண்டு நெய்த்தாரா ஆற்றங்கரையில் அதற்கொரு கோயிலும் கோட்டையும் கட்டிப் பதினோராண்டிருந்தான். அரிச்சந்திர பெருமாள் பாளி மலையில் ஒரு கோட்டை அமைத்து, அங்கே தான் தனித்திருந்த ஒருவரும் அறியாவகையில் மறைந்து போனான். அவனையடுத்துவந்த மல்லன் பெருமாள் பன்னிரண்டாண்டு ஆட்சிசெய்தான்.

இப்பெருமாட்குப் பின்வந்த பெருமாள் பாண்டிப்பெருமாளான குலசேகரப் பெருமாள் எனப்படுபவன். இவன் காலத்தே வெளிநாட்டிலிருந்த ஆசிரியர் இருவரைக் கொணர்ந்து திருக்கண்ணபுரம்

என்னுமிடத்தே கல்லூரி ஒன்று நிறுவி வேதியர்கட்குக் கல்வி வழங்கினான். அவன் பதினெட்டியாண்டு அரசுபுரிந்திருந்து திருவஞ்சைக் களத்தினின்றும் உடலோடே துறக்கம் புகுந்தான்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் கேரளநாடு அரசர்களின்றிக் குடியரசாய் நெடுங்காலம் இருந்து வந்தது. ஊராட்சியும் நாடாட்சியும் "பருடையார் மூல பருடையார்" என்னும் மக்கட் கூட்டத்தார் ஆட்சி செய்து வந்தனர். ஒருகால் இவர்களிடையே கருத்து வேறுபாடு உண்டாகவே, ஆனைகுந்தி கிருட்டினராயனை வேண்டித் தமக்கோர் அரசனை நல்குமாறு கேட்டுக் கொண்டனர். அவர் ஒரு சத்திரியனைச் சேரமான்பெருமானாய் ஆட்சிசெய்யுமாறு அனுப்பினார். அவன் பன்னிரண்டாண்டு இனிய ஆட்சிசெய்ததனால் மேலும் இருமுறை அவனே சேரமான் பெருமானாய் ஆட்சிநடத்தும் அமைதிபெற்றான். அந்நாளில் கிருட்டினராயர் மலையாள நாட்டின்மேற் போர் தொடுக்கலுற்றார். அதனையறிந்த சேரமான் அவரோடு பொருது முதற்கண் தோல்வி யெய்தினும் மறுமுறை வெற்றி பெற்றான். பின்பு சங்கராசாரியார் தோன்றிக் கேரளநாட்டு வரலாற்றை எழுதியதோடு பிராமணர்களுக்கு ஒழுக்க நெறிகள் பல ஏற்படுத்தி நல்வழிப்படுத்தினார். முடிவில் இச்சேரமானும் மெக்காவுக்குப் போனான் என்று கேரளோற்பத்தி கூறுகிறது.

இக் காலத்தே கேரளநாட்டின் புறத்தில் பாண்டிநாடும் கொங்கு நாடும் துளுநாடும் வயநாடும் புன்னாடும் இருந்தன. இச் சேரமான் கேரளத்தைப் பதினெட்டுச் சிறுநாடுகளாக வகுத்து ஆட்சி செய்தான். மெக்காவுக்குப் போனபோது கோழிக்கோட்டு வேந்தனை சாமரின்பால் தன் உடைவாளைத் தந்துவிட்டுப் போனான் என்றும், அங்கே (மெக்காவில்) அவன் இறத்தற்குமுன் அரபியர் தலைவன் ஒருவனை மலையாள நாட்டுக்கு அனுப்பினானென்றும் அவன் வந்து மலையாளநாட்டில் இசலாம் சமயத்தைப் பரப்பினான் என்றும் கேரளோற்பத்தி கிளந்துரைக்கின்றது.

மெக்காநாட்டில் வாணிகம் செய்து பெருஞ்செல்வம் ஈட்டிய ஒருவன் கோழிக்கோட்டில் தங்கினான் என்றும் பின் புண்டாரகோன்

என்பான் காலத்தில் வெளி நாட்டிலிருந்து கோயமர் ஒருவன் போந்து சாமரினுக்குப் பெருந்துணை செய்தானென்றும் அவன் பெயரால் அக் கோழிக்கோடு கோயிக்கோடு என்று பெயர் எய்துவதாயிற்றென்றும் அதே நூல் கூறுகிறது.

இந்த நாட்டுக்குக் கேரளம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் கூறப்புகுந்த இந்தக் கேரளோற்பத்தி, மலையாள நாட்டு வேதியர்கள் ஒருகால் சோழமண்டலம் சென்று தங்கட்கொரு வேந்தன் வேண்டுமென ஒருவனை வேந்தனாகக் கொணர்ந்தனரென்றும், அவனுக்குக் கேரளன் என்று பெயரென்றும், அவன் தனது ஆட்சியைச் செவ்வே நடத்திவிட்டுச் சென்றதனால் அவனது நினைவுக்குறியாக மலையாள நாடு கேரளநாடு என்று பெயரெய்திற்றென்றும் புனைந்து கூறுகிறது. கேரளமான்மியம் என்னும் வடமொழி நூலும் கேரளோற்பத்தி கூறியதையே சிறிது வகுத்தும் விரித்தும் கூறுகின்றதே யன்றிப் புதுவதாக ஒன்றும் கூறவில்லை. இதன் இடையிடையே வேதியர்கட்கு உள்ள சிறப்பும் நாட்டு வாழ்க்கையில் அவர்கட்கிருந்த உரிமையும் செல்வாக்கும் நன்கு விரித்துக் கூறப்படுகின்றன. இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த மேனாட்டு ஆங்கிலேயர் வில்லியம் லோகன் (William Logan) என்பவர் உண்மைக்கு மாறாகப் போய் நிறைந்த கதை செறிந்த இந் நூல்களை இந் நாட்டு வேதியர்கள் தங்கள் நலமே பெரிதும் பாதுகாக்கப்பட்டு நிலைபெறும் பொருட்டு வேறிதே போய் புனைந்து அமைத்துக்கொண்ட புளுகு மூட்டை யென மனம்வெதும்பிக் கூறியிருக்கின்றார்.[1] வடநாட்டு அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களும் 'சோள பளய சத்திய புத்திர கேரள புத்திர தம்ப பர்னி' என்று குறிக்கின்றன. இதனால் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சேரநாடு கேரளநாடென வடவரால் வழங்கப்பெற்றதென்பது விளங்குகின்றது.

அக் காலத்தில் மேலைநாட்டிலிருந்து கிரேக்கர்களும் யவனர்களும் பாபிலோனிய நாட்டுக் கோசியர்களும் பிறரும் மேலைக்கடலில் கலம் செலுத்திவரலாயினர். எகிப்துநாட்டு வேந்தர்கீழ் வாழ்ந்த போனீசியர்

[1] W. Logan's Malabar Manual பக். 246.

களே முதற்கண் அரபிக்கடலில் கலம் செலுத்தி நாடுகாணும் நாட்டம் கொண்டனர். அவருடைய முயற்சி முற்றம் வாணிகம் செய்து பொருளீட்டுவதிலேயே கழிந்தமையின் அவர்களுடைய குறிப்புக்கள் கிடைப்பது அரிதாய்விட்டது. கி. மு. ஐந்து ஆறும் நூற்றுண்டில் கிரேக்கர் முற்போந்து கடல்கலம் காணமுயன்றனர். அவர்கள் தொடக்கத்தில் மத்தியதரைக்கடலையும் கருங்கடலையும் அகலக்கண்டனர். அந்நாளில் அலெக்சாந்தர் விடுத்த கிரெக்கர்களை வடஇந்தியாவின் சோலைப் பகுதியான சிந்துநதி நாட்டைக் கண்டுகொண்டு திரும்பினர். அவர்கட்குத் தலைவனுன நியூயார்க்கசு (Nearchus) தரைவழியாகச் சிந்து நதிக்கும் யூபரடீசு டைகரீசு ஆற்றுக்கும் இடையிலுள்ள நிலப் பகுதியில் வழிகண்டான். அது முதல் நமது இந்தியநாட்டின் செல்வ நிலை கிரேக்கர் உள்ளத்தில் மதிப்பு உண்டுபண்ணிற்று. அலெக்சாந்தருக்குப் பின் செல்யூகசு நிகேட்டர் விடுத்த மெகஸ்தனிசு என்பார் கங்கை நாட்டுப் பாடலிபுரத்தில் (Palibothra) சந்திரகுப்த வேந்தன்பால் தங்கித் தாம் அந்நாளிற் கேள்வியுற்ற செய்திகளைக் குறித்து வந்தார். அக்குறிப்பினுள் தென்தமிழ்நாட்டு வேந்தர்களான சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அவற்றுள் சேர்மா (Charmae) என்பது சேரமான்களையும், நரு (Narae) என்பது சேர நாட்டு வடபகுதியான குடநாட்டு நறவூரையும் குறிப்பனவாம்.[1]

பின்னர் எகிப்து நாட்டையாண்ட தாலமிகள் செங்கடல் வழியாக இந்திய நாட்டுக்கு வழிகண்டனர். அவர்கட்குப்பின் யவனர் தோன்றி நம் இந்திய நாட்டோடு வாணிகம் செய்யத் தலைப்பட்டனர். அவர்களில் இப்பலாசு (Hippalus) என்னும் கிரேக்கன் நம் நாட்டில் அடிக்கும் தென்மேற்கு பருவக்காற்று நிலையையும் வடகிழக்குப் பருவக்காற்று நிலையையும் கண்டு உரைத்தான். அதன்பின் யவன வாணிகம் பெரிதும் வளம்பெற அவர்களிடையே நடைபெறுவதாயிற்று; அப் பருவக்காற்றுக்களையும் அவர்கள் இப்பலசு என்றே வழங்கினர். யவனர்கட்குப் பல்லாண்டு முன்பிருந்தே அரபிக்கடலில் அரபியரும் இந்தியரும் கலம்செலுத்தி வாணிகம் செய்து வந்தனராதலால் அவர்கள் இப் பருவக்காற்றை அறியாதிருந்தனரென நினைத்தற்

[1] W. Woodburn Hyde's Ancient Greek Mariners P. 206.

குச் சிறிதும் இடமில்லை. கி. மு. ஆறும் நூற்றாண்டில் (கி. பி. 556-533) ஆட்சி புரிந்த சால்டிய வேந்தன் நபோனிதாசு காலத்தேயே இந்தியாது கடல்வாணிகம் சிறந்து விளங்கிற்று; சிலர் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலேயே இந்தியநாட்டு மேலைக் கடற்கரைக்கும் மேனாட்டுக்கும் இடையே பெருவாணிகம் நடைபெற்றது என்று கூறுகின்றனர்[1] இக் கடற்காற்றின் இயல்பறிந்து பண்டைத் தமிழ்மக்கள் கடலிற் கலஞ்செலுத்திய சிறந்த செயலைப் புறப்பாட்டு[2] எடுத்துக் கூறுவது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

இக் காலத்தே மேனாட்டுக்குத் தென்தமிழ் நாட்டினின்று தூதொன்று சென்று யவனவேந்தரான அகசட்டசு என்பாரது தொடர்புபெற்று சுபெயின் (Spain) நாட்டுக்குச் சென்றது. இத் தூது தென்பாண்டிநாட்டு வேந்தனொருவன் விடுத்ததென்பர்.[3] வடநாட்டுப் போரசு என்னும் வேந்தன் விடுத்தது என்பார் உளராயினும் அவர் கூற்று வலியுடையதாயில்லை.

இவ்வாறு மேலைநாட்டவர்க்கும் தென்தமிழ் நாட்டவர்க்கும் இடையே வாணிகம் மிகுதிப்பட்டதனால் யவனநாட்டினின்று தமிழ் நாட்டுக்கு வரும் மரக்கல மாக்கட்கென யவன நாட்டில் நூல்கள் எழுந்தன. அவற்றுள் எரித்திரையன்கடற்செலவு (Periplus of Erythraen Sea) என்று பெயரிய இரு நூல்கள் உண்டாயின. ஒன்று ஆசியநாட்டுக் கடற்செலவையும் மற்றொன்று ஆப்பிரிக்கா நாட்டுக் கடற் செலவையும் கூறுவன.[3] இது கி. மு. முதல் நூற்றாண்டில் தோன்றியதென்பது அறிஞர் கொள்கை. இக்காலத்துக்கு முன்பே, தென்தமிழ் நாட்டவர் சிலர் ஐரோப்பாவைச் சுற்றிச் சென்று வடகடலில் செர்மனி நாட்டருகில் உடைகலப்பட்டு ஒழிந்தன ரென்றொரு செய்தி அவருடைய நூல்களிற் காணப்படுகிறதென அறிஞர்கள் உரைக்கின்றனர்.[4] கி. பி. முதல் நூற்றாண்டில் பிளினி (Pliny) என்பார் மேலைக்கடற் செலவுபற்றிய நூலொன்றை எழுதியுள்ளனர்.

---

1 T. V. C. Manual (Nagam Iyer.) Vol. 1. P. 263. 2 புறம் 66.

3 W. Woodburn Hyde's Ancient Greek Mariners P. 215—32

4 W. L. Malabar P. 252.

அதன்கண் இக்கடற்செலவு சார்பான செய்திகள்பல விரிவாகஉரைக்கப் பட்டுள்ளன.

கி. மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பெட்ரோனியசு (Petronius) என்பார் அந்நாளை யவனச் செல்வமகளிரின் பெருமித வாழ்வைக் கண்டித்து நூலொன்றை எழுதி யிருக்கிறார். அதன்கண் நம் தமிழ் நாட்டிலிருந்து யவனர்கள் கொண்டுசென்ற மெல்லிய ஆடையை உடுக்குமாற்றால் யவன மகளிர் தங்கள் மேனி முற்றும் புறத்தே தெரியுமாறு காட்டிப் பொலி விழக்கின்றனரென்றும், அவ்வாடைகள் காற்றாலாகியவை, முகிலாலாகியவை, ஆவியாலாகியவை யென்றும் குறித்திருக்கின்றார். "புகை முகந்தன்ன மாசில் தூவுடை" என்றும் "ஆவியந்துகில்" என்றும் வரும் சங்க நூற் கூற்றுக்கள் அவர் கூறுவனவற்றை வற்புறுத்துகின்றன.

எகிப்து நாட்டு ஒசிலிசு (Ocelis) துறையினின்றும் புறப்படும் கலம் தென்மேற்குப் பருவக் காற்றைத் துணைக்கொண்டு நாற்பது நாட்களில் முசிறித்துறையை அடையும்; அத்துறையில் கடற்கொள்ளைக் கூட்டத்தினர் (Pirates) உளர்; அவர்கள் நித்திரியாசு (Nitories) என்ற விடத்தில் உறைபவர். முசிறித்துறை வணிகப் பொருள் மிகுதியாக வுடையதன்று. கலம் நிற்கும் இடத்துக்கும் முசிறித் துறைக்கும் நெடுந்தூரம் இருக்கிறது; ஏற்றற்குரிய பொருள்களைச் சிறு சிறு படகுகளில் கொணர வேண்டும். இப் பகுதிக்குரிய வேந்தன் கேலோபாத்திராசு (Caelobothras); இம் முசிறித்துறையில் நியாசிண்டி (Neacyndi) நாட்டிலுள்ள பாரேசு (Barace) துறை சிறந்து விளங்குகிறது; அதற்குரிய வேந்தனான பாண்டியோன் (Pandion) உள்நாட்டில் மதுரை (Modora) என்னும் நகர்க்கண் இருக்கின்றான்; பாரேசுத்துறைக்குக் கோட்டநாராவிலிருந்து மிளகுப் பொதிகள் வருகின்றன என இவ்வாறு பிளினி என்பார் எழுதியுள்ளார்.[1]

பிளினியினுடைய குறிப்புக்களால் கி. பி. முதல் நூற்றாண்டில் சேரநாடு தென்கொல்லம் வரையிற் பரந்திருந்தமையும் அதன் தென் பகுதி தென்பாண்டி நாடென்பதும் தெளிவாய் விளங்குகின்றன.

---

[1] W. Logan's Malabar P. 258.

இவ் வகையில் பெரிப்புளுசு நூலாசிரியர் கூறுவனவும் ஒத்திருக்கின்றன. ஆயினும் முசிறித் துறை செல்வத்தாற் சிறப்புடைய மாநகரம் என்றும், வடநாடுகளிலிருந்தும் எகிப்து நாட்டிலிருந்தும் எப்போதும் கலங்கள் வருவதும் போவதுமாக உள்ளன என்றும் பெரிப்புளுசு நூலாசிரியர் கூறுகின்றார். அவர் கூற்று "சேரலர் சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்தவினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"[1] என்ற சங்கநூற் கூற்றால் வலியுறுகின்றது.

கி. பி. 126-61இல் வாழ்ந்த தாலமி (Ptolomy) என்பார் எழுதியுள்ள குறிப்பில் சேரவேந்தர் கேரள போத்திராக (Carelabothras) என்றும் குறிக்கப்படுவது காண்கின்றோம்.[2]

கி. பி. 226 அளவில் எழுதப்பட்டதெனப்படும் பியூதிங்கர் நூல் (Peuthingar Tables) முசிறியில் யவனர் இருக்கை ஒன்றிருந்த தெனவும், அங்கே அகஸ்சட்டசுக்குக் கோயிலொன்றிருந்ததாகவும் அதனை யவனப்படை யிரண்டு இருந்து காத்துவந்தன வெனவும் கூறுகிறது;[3] ஆனால் முசிறிநகரைக் குறிக்கும் சங்கப் பாட்டுக்கள் இச்செய்தி குறித்து ஒன்றும் கூறவில்லை. இவற்றை நோக்குவோர் முசிறியில் யவனர் அகஸ்டசுக்குக் கோயிலெடுத்த காலம் சங்கத்தொகை நூல்கள் தோன்றிய காலத்துக்குப் பின்னதாம் என்பதைத் தெளிவாகக் காண்பர். ஆகவே சங்கத் தொகை நூல்கள் பலவும் கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கும் முற்பட்டன என்பது தேற்றமாம்.

இச் சங்கவிலக்கியங்கள் யாவும் சேரநாட்டைச் சேரநாடென்றும் அந்நாட்டுவேந்தர்களைச் சேரரென்றும் சேரலரென்றும் தெளியக்கூறுகின்றன. பிற்காலத்துத் தமிழ்நூல்களும் அந்நெறியில் வழுவியது இலையாது. வடநாட்டு வடமொழி நூல்களுள் வேதங்களும் இதிகாசங்களும் சேரர்களைச் சேரரென்றே குறிப்பதை முன்பே கண்டோம். செல்யூகஸ் நிகேட்டர் காலத்து மெகஸ்தனிசு என்பார் கங்கைக்கரைப்

---

[1] அகம் 149. [2] Log Malabar P. 254.

[3] Ibid P. 253. M 'Cyindlcs' Translation of the Periplus of Erythyaean Sea P. 53-63; W. Logans Malabar P, 256.

பாடலிபுத்திலிருந்து எழுதிய குறிப்பும் சேரர்களைச் சேரமான்களென்றே குறித்துள்ளது. ஆனால் அசோக மன்னனுடைய கல்வெட்டுக்கள் சேரர்களைக் கேரளபுத்திரர் என்று கூறுகின்றன. ஆயினும் அத்தொடர் சேரல புத்திரர் என்று படிக்குமாறும் அமைந்திருக்கிறது. மற்று அவற்றைப் படித்த அறிஞர் பலரும் கேரள புத்திரர் என்றே படித்து வந்திருக்கின்றனர். பிற்கால வடநூற்பயிற்சியால் அசோகன் கல்வெட்டுக்களைப் படித்தோர், கேரளபுத்திரர் என்று கருதி விட்டிருக்கலாம். இடைக்காலச் சோழவேந்தர் கல்வெட்டுக்கள் சேரவேந்தர்களைக் கேரளர்[1] என்று கூறுவதால் அசோகன் கல்வெட்டுக்களைக் கேரள புத்திரரென அவர்கள் படித்தற்கு இடமுண்டாயிற் றெனவும் கருதலாம். இடைக்காலக் கல்வெட்டுக்களை நோக்குமிடத்துக் கேரளர் என்ற வழக்குக் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பே தோன்றியிருப்பது தெரிகிறது.[2] ஆனால் கி. பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் முதலியோர் திருப்பதிகங்களுள் சேரர், சேரலர் என்ற பெயர்கள் காணப்படுகின்றனவேயன்றி கேரளம் என்ற சொல் வழக்குக் காணப்படவில்லை. இதனை ஆராயுங்கால் கேரளர் என்ற வழக்காறு சோழ பாண்டிய நாட்டில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தான் உண்டாயிற்றென்பது விளங்குகிறது.

சேரலர் என்பது கேரளர் எனமாறி வழங்கும் முறை வட நாட்டில் நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றிவிட்டது[1] அசோகன் கல்வெட்டிற் காணப்படுவது கேரளமென்பதேயாயின் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வடவர் சேரலர் என்னும் தமிழ்ச் சொல்லைக் கேரளரெனத் திரித்துக்கொண்டன ரென்றறியலாம். ஆனால் மேனாட்டுக் கிரேக்க யவனர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் சேரர்களைச் சேரர்கள் என்றும் சேரமான்கள் என்றுமே வழங்கி வந்திருக்கின்றனர்.

---

[1] Inscriptions of Sri: Vira Rajendra Raja Kesari Varma S. I. I. Vol. iii. No. 20.

[2] Velvikudi grant. E. P. Indi. Vol. xvii. No. 16.

வேதகாலத்துக்குப் பின்வந்த வடமொழியாளர் தாங்கள் புதியவாய்க் காணும் நாடு நகரங்களின் பெயர்களையும், ஆறுகள் ஊர்கள் முதலியவற்றின் பெயர்களையும் மக்களினத்தின் பெயரையும் தாங்கள் கலந்து வழங்கும் வகையில் மூன்று நெறிகளை மேற்கொண்டனர். முதலாவது தாம் எதிர்ப்படும் பெயர்களைத் தம்முடைய மொழியில் மொழிபெயர்த்துக் கொள்வது: பாண்டிநாட்டுக் கூடல்வாயிலைக் கபாடபுரம் என வால்மீகியார் மொழிபெயர்த் துரைப்பதையும், பின்வந்தோர் அந் நெறியையே பின்பற்றி நாடு நகரங்களின் பெயர்களையும் ஆறு குளங்களின் பெயர்களையும் மொழிபெயர்த்துக் கொண்டிருப்பதையும் தமிழுலகம் நன்கறிந்திருக்கிறது. தமிழகத்து மேலைமலைத் தொடரைச் "சஹ்யாத்திரி" யென்பதும் தொண்டைநாட்டுப் பாலியாற்றைச் "ட்சீர நதி" யென்பதும் நடுநாட்டு முதுகுன்றத்தை விருத்தாசலமென்பதும், மதுரைத் திருவாலவாய் அங்கயற்கண்ணியை மீனாட்சி என்பதும் போதிய சான்றுகளாகும். மற்றொன்று, எதிர்ப்படும் பிறமொழிச் சொற்களைத் தங்கள் மொழிநடைக் கேற்பத் திரித்துக் கொள்வது: இதற்குத் தென்றமிழ்நாட்டு முத்துக்களை முக்தம் என்பதும், பவளத்தைப் பிரவாள மென்பதும், சோழனைச் சோடன் என்பதும் ஏற்ற சான்றுகளாம். வேறொன்று, தம்மொழி நடைக் கொத்தவற்றை ஒரு திரிபுமின்றி ஏற்றுக் கொள்வது. அம் முறையில் மணி, மீன், நீர் என்பவற்றை வடமொழியில் ஏற்றுக்கொண்டுள்ளனர். பண்டைநாளைத் தொல்காப்பியரும் மொழி நடைக்கேற்ற எழுத்தால் பிறமொழிச் சொற்களை ஏற்றல் வேண்டும்; வேறுபடுப்பது நேர்மையன்று என்பதற்காகவே, "வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" [1] என்று தமிழ் மக்கட்கு வழிவகுத்துரைத்தார். இந்தச் சீரியமுறையை வடவர்க்கு வடமொழி ஆசிரியர் வகுத்துரைக்கவில்லை போலும். நேர்மை திறம்பாத நெறிமேற்கொண்ட மேனாட்டுமொழியாளர்களும் கட்டுமரம் (Kattu-maram) மிளகு தண்ணீர் (Molaktanni), இஞ்சி (Ginger), அரிசி (Rice), தோகை (Tugi), தேக்கு (Teak) முதலியவற்றைத் தங்கள்

[1] தொல். சொல். எச்ச. 5

தங்கள் மொழிநடைக் கேற்பத் திரித்து மேற்கொண்டனர். இவ்வாற்றால் வடவர் கூட்டுறவு பெற்ற சேரநாட்டவர் தம்மைக் கேரளரென்றும், தங்கள் நாட்டைக் கேரள நாடென்றும் வடவர் வழங்கியவாறே[2] வழங்குவாராயினர். இன்றும் தென்னாட்டவருள் தமிழரொழியப் பிறரனைவரும் தங்களை வடவரிட்ட பெயராலேயே வழங்குவதும் குறிக்கத்தக்கது.

இனி, சேரநாட்டுச் சேரலர், தம்மைக் கேரளரென வழங்கத் தலைப்பட்டகாலம் தமிழ்மொழி சிதைந்து மலையாளமாக மாறியகாலம்; சேரநாடென்றும் குடமலைநாடென்றும் வழங்கிய காலம் அந்நாட்டிற் செந்தமிழ் சிதையாது நிலவிய காலம். இடைக் காலத்திற் சேரநாட்டுப் பகுதிகளில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுக்களை நோக்கின் அப்பகுதியிலுள்ள மக்களும் ஊர்களும் தூய செந்தமிழ்ப் பெயர் தாங்கியிருப்பதைக் காணலாம். பரோலா என்னுமிடத்துக் கல்வெட்டு அவ்வூரைப் புலவேர் வாயில் எனவும், திருவென்னூரிலுள்ள கல்வெட்டு[1] அவ்வூரைத் திருமுன்னூர் எனவும், இருஞாலக்குடாவில் உள்ள கல்வெட்டு[3] அதனை இருஞாலக்கூடல் எனவும், கடலுண்டி என்னுமிடத்துக் கல்வெட்டு[4] அவ்வூரைத் திருமண்ணூர் எனவும் வழங்குவது போதிய சான்றும். மேலைக்கடற்கரைநாட்டு வடகன்னடம் மாவட்டத்திலுள்ள பாடகல் (Batkal) என்னுமிடத்துக் கல்வெட்டு அதனைப் பாழிக்கல் என்பதும் சோக் (Joag) என்னுமிடத்துப் பிற்காலக் கல்வெட்டு, அதனைத் தோக்கா என்பதும் நோக்கத்தக்கன.

சேரநாடு செந்தமிழ் மொழி வழங்கும் திருநாடாக விளங்கிய காலத்து வேந்தர்களே நாம்காணலுறும் சேரமன்னர்கள். கேரளோற்பத்தி, கேரளமான்மியம் என்ற இரண்டு நூல்களும் மிகவும் பிற்பட்ட

---

[2] காத்தியாயனர், பதஞ்சலி முதலியோர் கேரளரெனவழங்கியுள்ளனர்.

[1] S. I. I. Vol. V. No. 783. [2] Ibid No. 784; [3] M. Ep. A. R. No. 358 of 1927. [4] S. I. I. Vol. V. No. 782.

காலத்தவரான விசயநகர வேந்தர்களைப்பற்றிக் கூறுவதனால், இவை காலத்தால் மிகமிகப் பிற்பட்டவை என்பது சொல்லாமலே விளங்கும். இவற்றைக் கொண்டு பண்டைநாளைச் சேரநாட்டைக் காண்பதற்கு வழியில்லை. இவற்றுள் சங்க காலத்துக்கும் விசயநகர வேந்தர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்து நிகழ்ச்சிகளுட் சில இவை கூறும் வரலாற்றுள் மறைந்திருக்கலாம்.

தொன்மையுடைய பொருளே பெருமையுடைய தென்னுங் கொள்கை இடைக்காலத்தே அறிஞர் சிலருடைய கருத்தில் உண்டாயிற்று. அதனால் பலநூல்களைப் பலஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டவை என்று கூறும் செயல் தோன்றிற்று. உண்மையிலேயே தொன்மையும் பெருமையுமுடைய நூல்களைக் கண்டு சிலர் மனம் பொறாது, அவற்றின்தொன்மையைக் குறைத்தால் பெருமைகுறையுமென்று மனப்பால் குடித்துத் தவறும் சூழ்ச்சியுடையும் நிறைந்த கருத்துக்களால் தாம் வேண்டியவாறு எழுதலாயினர். தன் பெயர் நிலைபெறுவது விழைந்து தயனுதேவி கோயிலைத் தீயிட்டுக் கொளுத்திய யவனன் போலப் பழமையான சில தமிழ்நூல்களைக் காலத்தால் பிற்பட்டன என்று கூறிவிடின் அவை பெருமை குன்றிவிடும் என்று தம்முடைய செல்வாக்கையும் பதவியையும் துணையாகக் கொண்டு ஆராய்ச்சி என்ற பெயரால் சொல்வலைபிட்டுத் திரையிட முயன்றுவரும் முயல்வோரும்உண்டு. இவ்வாறன்றி, காய்தல் உவத்தல் இன்றி நடுநிலை திறம்பாது பண்டைநாளை நிலையினைக் காண்பது இப்போது மிக இன்றியமையாததாகிறது.

மேலும் இடைக்காலத்தில் இருந்து ஆராய்ச்சி நிகழ்த்தியோரினும் இக் காலத்து ஆராய்ச்சியாளர்கட்குக் கருவிகள் விரிவாகக் கிடைத்துள்ளன. நிலவுலகத்தில் ஆங்காங்கு வாழும் மக்களுடைய தொன்மையும் வரலாறும் வழக்காறும் அறிந்து கொள்ளத்தக்கவகையில் நூல்கள் வந்துள்ளன. இலக்கிய நூல்கட்குத் துணையாகக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியுரைகளும் பெருகக் கிடைத்திருக்கின்றன. ஒருகாலத்தில் உண்மையெனக் காணப்பட்டதொன்று பிறிதொருகாலத்தில் தவறுபடுவதும்,

தவறெனக் கருதியதொன்று உண்மையாவதும், ஒருகாலத்தில் எல்லையென வரம்பிட்ட ஒன்று பிறிதொரு காலத்தில் மாறுவதும் புதுவரம்பொன்று காணப்படுவதும் ஆராய்ச்சி நெறியில் இயற்கையாய் விட்டன. அதனால் ஆராய்ச்சியாளர் உண்மையைக் கடைப்பிடித்துக் கிடைக்கும் கருவிகளைக் கொண்டு அச்சம் இன்றித் தமது ஆராய்ச்சியை நிகழ்த்தத் தலைப்பட்டுவிட்டனர். விஞ்ஞானத் துறையிலேயே (Field of Science) வரம்பறுக்கப்பட்ட வுண்மைகள் பல போலியாய் ஒழிகின்றன எனின், வரலாற்றாராய்ச்சிக்கு வேறு கூறுவது மிகையன்றோ!

இந்நெறியே நின்று நோக்கும்போது மேனாட்டுயவனர்களும் வடநாட்டு வடநூல்களும் கூறுவனவற்றால் சேராது தொன்மை வேத காலத்தேயே விளங்கியிருந்தமை தெளிவாயிற்று. சங்க இலக்கியங்களுள் சேரர்கள் சார்பாக நிற்கும் பாட்டுக்களிற் காணப்படும் ஊர்களும் நிகழ்ச்சிகளும் கிரேக்கயவனர் குறிப்புக்களிலும் ஒப்பக்காணப்பெறுகின்றன. அக்குறிப்புக்களின் காலம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டில் நிலைபெறுகிறது. அவற்றுட்சில சங்க இலக்கியங்களில் காணப்படாத குறிப்புக்களை உணர்த்துமாற்றால், காலத்தால் சங்க இலக்கியங்கட்குப் பிற்படுகின்றன. படவே, சங்க இலக்கியங்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவல்ல வென்பது உறுதியாகிறது. K. G. சேசையர் முதலியோர் சேரவேந்தர்களைக் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிறுதிய இருந்தனர் என்று கூறுகின்றனர். அவர்கள் சங்க இலக்கியங்களைத் துணைகொண்டனராயினும் அவர் கூறுவன வேறு வகையில் நிறுவப்படாமையால், சங்க இலக்கியங்களின் மேலெல்லை கி. பி. முதல்நூற்றாண்டென்று கொண்டொழிவதே தக்கது.

பழந்தமிழ்ப் புலவருங் கடவுள் வாழ்த்தும்

திரு. M. பொன்னையா M. A., தமிழ் விரிவுரையாளர்
அமரிக்கன் கல்லூரி, மதுரை.

பழந்தமிழர் பண்பாடு, வாழ்க்கை, அரசியல் முதலிய சிறப்புக்களை யெல்லாம் நாமறிரியுமாறு கூறுவன, தொகைநூல்களும் தனி நூல்களும். தொகை நூல்களெல்லாம் பிற்காலத்தவரால் தொகுக்கப் பட்டன என்பதும், தொகுத்தார் தொகுப்பித்தார் காலத்திற்குப் பன்னெடுங்காலம் கழித்துத் தோன்றிய பாரதம்பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள்வாழ்த்துக்களே அவ்வத் தொகைநூல்களின் முகப்பிற் காணப்படுகின்றன என்பதும் அறிஞர் அனைவரும் அறிந்தவுண்மை. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்ற முப்பெரு நூல்களும் தனித்தனியே பேராசிரியர் மூவர்எழுதிய முழு நூல்கள் ஆதலின், அந் நூல்களில் காணப்படும் கடவுள்வாழ்த்துக்களும் பிறகுறிப்புக்களும் பழந்தமிழரது கடவுள் வாழ்த்துப் பற்றிய கொள்கையை வெளியிடத் தகுதிவாய்ந்தன.

இக் காலத்தில், நூல் செய்வாரெல்லாம் கடவுள் வாழ்த்தோடே தம் நூல்களைத் தொடங்குகின்றனர். மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியம் கடவுள்வாழ்த்தை முகப்பிற்கொள்ளவில்லை. திருவள்ளுவர் தம் நூலின் தொடக்கத்தில் 'கடவுள்வாழ்த்து' என்ற ஒரு அதிகாரத்தையும், அதனை அடுத்து 'வான் சிறப்பு', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்ற மூன்று அதிகாரங்களையும் பாயிரமாக அமைத்துள்ளார். இளங்கோவடிகளது சிலப்பதிகார முகப்பில் 'பதிகத்தையும்' அதனை அடுத்து 'மங்கலவாழ்த்துப் பாடல்' என்ற பகுதியையும் கொண்டுள்ளது, இவற்றுள் சிலப்பதிகாரப் பதிகம் அடிகளால் எழுதப்படாமல் பிற்காலத்தவர் ஒருவரால் எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கலாம் என்ற ஒரு கொள்கை அறிஞரிடையே நிலவி வருகின்றது.

"இவவாறைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிகள் அருள மதுரைக்
கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்"

என்று சிலப்பதிகாரப்பதிகத்தில் இளங்கோவடிகளும் சாத்தனாரும் படர்க்கையிற் சுட்டப்படுவது அக் கொள்கைக்கு ஆதரவு தருகின்றது. எனவே, மங்கலவாழ்த்துப் பாடலே இளங்கோவடிகளின் சிலப்பதிகார முகநிலைப் பகுதி என்பது விளங்குகிறது.

இக் காலத்துக் கடவுள் வாழ்த்துக்கள் வழிபடு கடவுட்கோ, ஏற்புடைக் கடவுட்கோ செய்யும் வழிபாடாக அமைகின்றன. இளங்கோவடிகளின் 'மங்கல வாழ்த்துப் பாடல்' இம் முறையிலிருந்து பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அவர் திங்கள், செங்கதிர், மழை, புகார், உயர்ந்தோர், அரசன்என அறுவகைப்பொருளை வாழ்த்துகின்றார். அவ் வாழ்த்தும் அரசியலையே மறைமுகமாக வாழ்த்துவதாக அமைந்து கிடக்கின்றது. திங்கள் முதலியவற்றை அடிகள் போற்றுவதெல்லாம் அவைகள் முறையே அரசனுடைய குடை, திகிரி, தண்ணளி முதலியவற்றை ஒத்துள்ளன என்பது பற்றியே என நாம் அறிகிறோம்.

திருக்குறளின் தொடக்கத்தில் நான்கு அதிகாரங்களாலான பாயிரத்துக்குப் பின்னரே அறத்துப் பாலின் முதல் இயலாகிய இல்வாழ்க்கை இயல் காணப்படுகின்றது. திருக்குறட் பாயிரவதிகாரங்கள் நான்கற்கும் இளங்கோவடிகள் அமைத்த 'மங்கல வாழ்த்துப் பாடலின்' தலைப்பிற்காணப்படும் வாழ்த்துக் கட்கும் இயைபுண்டோ என்பது ஆராயவேண்டிய தொன்று.

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்துக்கூறி நூல்தொடங்காவிட்டாலும், தாம் கூறும் இலக்கணங்களிற் 'கடவுள் வாழ்த்து' என்ற தொடரை அமைத்துள்ளார். பாடாண்டிணையில்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"—புறத்திணையியல் 33.

என்னும் நூற்பா காணப்படுகின்றது. அந் நூற்பாவிற்கு உரைவகுத்தோருள் உரையாசிரியர் உரைத்த விளக்கங்களும், பிற உரைகாரர் கருத்துக்களும் கற்பார் மனத்தே தெளிவை உண்டாக்குவனவாக இல்லை.

உரையாசிரியர் இந் நூற்பாவிற்கு உரை கூறுங்கால் புறப்பொருள் வெண்பாமாலை யுடையார் உரைத்தாங்கு உரைகூறி அவர் காட்டிய இலக்கிய வெண்பாக்களையே எடுத்துக் காட்டினர். இதனால் அவர் கொடிநிலை என்பது மூவர் (கடவுளர்) கொடியுள் ஒன்றோடு மன்னவன் கொடியை ஒப்பிட்டுப் புகழ்வது என்றும், கந்தழி என்பது நேமியான் சோகசெறிந்த வெற்றியை மிகுத்துக் கூறுவதென்றும், வள்ளி என்பது பெண்டிர் முருகற்கு வெறியாட்டெடுப்பது என்றும் உரைக்கின்றார்.

நச்சினார்க்கினியர், கொடிநிலையாவது கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத்தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் என்றும், கந்தழியாவது ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள் என்றும், வள்ளியாவது தண்கதிர் மண்டிலம் என்றும், முதலன மூன்றும் என்றது முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும் என்றும், கடவுள் வாழ்த்து என்றது முற்கூறிய அமரர்கண் முடியும் அறுவகை வாழ்த்து என்றும் பொருள் கூறினர். இதனால், தேவரைப் போல் ஒருவழிப் பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக்கு உரியர் என்கின்றது இந் நூற்பா என்றும் விளக்கங் கூறினர். இவ்வாறு தாம் உரை கூறுவதற்கு வழிவழிவந்த உரையாதாரம் ஒன்றும் அவரால் காட்டப்படவில்லை.

இவ் வுரையாசிரியர்கள் உரைத்தவற்றைப் படித்தவர், தொல்காப்பியர் கருத்துக்கும் இவ் வுரைகளுக்கும் நெருங்கிய தொடர்பில்லை என்று எண்ணியபோதோ டமையாமல் கொடிநிலை, கந்தழி, வள்ளி, கொற்றவள்ளை என்பன வேறுவேறு செய்யுள்வகைகளைக் குறிக்குஞ் சிறப்புப் பெயர்களென்றும், அச் சொற்கள் கடவுளது வீரச்செயல்

களை விளக்குவன என்றும், அவைகொண்டிருந்தபொருள் இக்கால
தில் இறந்துவிட்டது என்றும் கூற முன் வந்தனர்.[1]

இந் நூற்றாண்டில் சிறந்த ஆராய்ச்சிகள் பல நடத்திய மு
இராகவ ஐயங்கார் அவர்கள் கருத்து இந் நூற்பாவுள்ளும் சென்று
ளது. திரு. ஐயங்கார் அவர்கள் 'இச்சூத்திரத்தில் கொடிநிலை, கந்தழி
வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தோடு வரும் என உயர்பெ
வழிவரும் ஒருவினை ஒடுச் சொல்லைக் கடவுள் வாழ்த்துக்குக் கூறி
தால், அவ் வாழ்த்து முதற்கட் கூறுஞ் சிறப்புடையதென்பதும், ம
றவை அதன்பின்னர்வைத்து வாழ்த்தப்படுதற்கு உரியனவென்பது
அறியத்தக்கன. இவற்றுள் கொடிநிலை என்பது மேகத்தை உணர்
தும்.....கந்தழி என்பது.......பற்றழித்தாராகிய நீத்தாரது தன்மை
வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும்.......இங்ஙனம், மேகம் நீ
தார் அறக்கடவுள்என்ற மூன்றும் முதற்கடவுளை முதலாகக்கொண்
வாழ்த்தப் படுதலும் இப்பாடாண் பகுதியாம் என்பது சூத்திர
பொருளாதல் கண்டுகொள்க. எனவே, வள்ளுவர் கூறிய பாயிரமு
இவ் விலக்கணம் பற்றியே அமைந்ததென்பது விளக்காம்[2] என்
கூறினர்.

திருவள்ளுவர் பாயிரவியலிற் கூறிய நான்கு அதிகாரங்களு
தொல்காப்பியர் வகுத்த இலக்கணத்துக்கு முரணுமல் அமைக்கப்ப
டிருக்கின்றன என்று திரு. ஐயங்கார் அவர்கள் குறிப்பிட்டது ப
ருக்கும் பெருமகிழ்ச்சியை உண்டாக்காமல் இல்லை. எனினும் 'மு
லன மூன்றும்' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர் 'முற்கூறப்பட்ட
மூன்று தெய்வமும்' என்பது, பிற்கூறப்படும் தெய்வங்களும் உ
போலும் என்பது போன்ற ஐயங்களை எழுப்புகின்றது. இதன் பெ
ருந்தாமை கண்டோர் இந் நூற்பாவின் ஒருபகுதி நமக்குக்கிடைக்
வில்லையோ? அல்லது ஏடெழுதவோர் ஒரு பகுதியை விட்டுவிட்
னரோ என்றெல்லாம் சிந்திப்பாராயினர். இன்னும் அவ் வையம் முற்
லும் நீங்கிவிடகவில்லை.

(தொடரும்)

[1] The Ancient Tamils' Part I, Published by Sri. S. K. Pilla
(1934). Page 106. [2] பொருளதிகார ஆராய்ச்சி பக். 119.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கனுநல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுராமும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY. Avl., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.